முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 99 | of | 2024 |

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 –ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு. A. Raju, Gr–I BC, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கருணாகரன் |
| தந்தை பெயர் | கோவிந்தன் |
| கிராமம் | |
| தொழில் | சிறப்பு வட்டாசியர் நில எடுப்பு |
| வயது | 47 |

நாள் 24.07.2026 – எ.ம.சா.1 (RW1)

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிர் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரம் நான் சொன்னது தான்.

**குறுக்கு விசாரணை**

தாவா நில எடுப்பு சொத்து எடுத்தபொழுது நான் சிறப்பு வட்டாட்சியராக அந்த சமயத்தில் பணியாற்றவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் எந்த சொத்தின் டேட்டா பேஸ் எடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பக்கத்து கிராமமான எச்சூர், பால் நல்லூார், மாம்பாக்கம், போந்தூர் வல்ல வடகால் மாத்தூர் ஆத்தூர் கிராமத்தில் பழைய நில எடுப்பு சட்டப்படி நில எடுப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அது முடிக்கப்பட்ட 20 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். அதைச் சுற்றி தற்சமயம் வெளிநாட்டு நிறுவனங்களான யமஹா மற்றும் Homostone கம்பெின் வந்துள்ளது என்றால் தெரியவில்லை. மேற்படி நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது என்றால் தெரியவில்லை. நான் அரசாங்கத்திற்கு பவ்வயப்பட்டு சரியான மதிப்பீட்டில் நிலத்தை எடுக்காமல் குறைவான மதீப்பிட்டில் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அரசு வழிகாட்டு மதிப்பு படி செய்யப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் ஏற்பட்ட கிரைய ஆவணங்களின் நகல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குறைவான மதீப்பீடு செய்ததால் கோருநர் இந்த வழக்கை தாக்கல் செய்ய நேரிட்டது என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள்

ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.